உண்மைத் தாள் 1

# வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறையை இனங்காணுதல்

**பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள், பலவிதமான வன்முறை மற்றும் தவறான நடத்தைகளை அனுபவிக்கக்கூடும். இவ்வாறான நடத்தைகள், பெரும்பாலும் ஆண்களால் மேற்கொள்ளப்படுகின்றன என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.**

**வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறைகளை (DFSV) அனுபவிக்கும் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களைத் திறம்பட அடையாளம் காணவும், ஆதரிக்கவும், மற்றும் அவர்களுக்குப் பதிலளிக்கவும் உங்களுக்கு உதவும்வகையில், அவ்வாறான வன்முறைகள் பற்றியும், அவை தொடர்பில் நீங்கள் எவ்வாறான உதவியை வழங்கமுடியும் என்பது பற்றியும் அறிந்து கொள்வது அவசியம்.**

**வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறை என்றால் என்ன?**

வீட்டு மற்றும் குடும்ப வன்முறை என்பது, ஒரு வாழ்க்கைத்துணை, ஒரு முன்னாள் வாழ்க்கைத்துணை, பாதிப்புக்குள்ளாகும் நபருடன் நெருங்கிய உறவில் உள்ள ஒருவர், அல்லது வேறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் உட்பட குடும்ப உறுப்பினர்கள் போன்றோர், பாதிப்புக்கு உள்ளாகுபவரைக் கட்டுப்படுத்த அல்லது பயமுறுத்த மேற்கொள்ளும் தவறான நடவடிக்கை ஆகும்.

**இது உடல் ரீதியானது மட்டுமல்ல**

வீட்டு வன்முறையானது, பின்வருபவற்றை உள்ளடக்கக்கூடும்:

- காயத்தை ஏற்படுத்தும் உடல் ரீதியான வன்முறை - அடித்தல், கடித்தல், தள்ளுதல், உதைத்தல், கழுத்தை நெரித்தல்
- பாலியல் வன்முறை - ஒருவரை உடலுறவு கொள்ளுமாறு கட்டாயப்படுத்துதல். இதில், கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்கொடுமை, குடும்பத்தில் ஏற்படும் ஒழுக்கமற்ற புணர்ச்சி, மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவை அடங்கும்
- உணர்ச்சி அல்லது உளவியல் துஷ்பிரயோகம் - தகாதவாறு அழைத்தல் அல்லது ஒரு வாழ்க்கைத்துணையை பகிரங்கமாக சங்கடப்படுத்துதல்
- வாய்மொழித் துஷ்பிரயோகம் - கத்துதல், தகாத சொற்களைப் பிரயோகித்தல், அல்லது ஒரு வாழ்க்கைத்துணையை தொடர்ந்து விமர்சித்தல்
- சமூக துஷ்பிரயோகம் - ஒருவரைத் தனிமைப்படுத்துதல் மற்றும் அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை அவர் பார்ப்பதைத் தடுத்தல்
- ஆன்மீக துஷ்பிரயோகம் - ஒருவரைக் கட்டுப்படுத்தவும் ஆதிக்கம் செலுத்தவும் ஆன்மீக அல்லது மத நம்பிக்கைகளை மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் அல்லது அவற்றை மறுத்தல்
- சொத்து சேதம் - கட்டுப்படுத்தல், மிரட்டல், அச்சுறுத்தல், அல்லது இழிவுபடுத்தல்
- நிதி துஷ்பிரயோகம் - நிதிகளைக் கட்டுப்படுத்துதல் அல்லது அத்தியாவசிய பணத்தை வழங்க மறுத்தல்
- தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்கள் - செல்லப்பிராணிகள் மற்றும் குழந்தைகள் உட்பட
- பின்தொடர்தல் - ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக, நேரில் அல்லது நிகழ்நிலையில் (ஆன்லைனில்) அவரைப் பின்தொடர்தல்
- வேலைத்தளத்தில் மற்றும் பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தல் மற்றும் மிரட்டல்
- பெண் பிறப்புறுப்பைச் சிதைத்தல்
- கட்டாய மற்றும் குழந்தைத் திருமணங்கள்
- 'மரியாதைக்' குற்றங்கள் என்று அழைக்கப்படுபவை - குடும்பத்திற்கு அவமானத்தைத் தரும் வகையில் அவர் செயற்பட்டார் என்ற உணர்வின் அடிப்படையில் ஒரு பெண்ணைக் கட்டுப்படுத்துதல், வன்முறை, மற்றும் பயம் போன்றவற்றை உள்ளடக்கும் குற்றங்கள்
- வரதட்சணை தொடர்பான துஷ்பிரயோகம் - வழங்கப்பட்ட வரதட்சணை, மணமகன் மற்றும் / அல்லது அவரது குடும்பத்தினரால் திருப்தியற்றதாகக் கருதப்படுதல். இது, திருமணத்திற்கு முன்பும், திருமணத்தின்போதும், அதன் பின்னும் மணமகளை துன்புறுத்தலுக்கு உள்ளாக்குகிறது. அத்துடன், இது துஷ்பிரயோகத்திற்கும், அதிக வரதட்சணையை மிரட்டிப்பெற வன்முறையைப் பிரயோகிப்பதற்கும் வழிவகுக்கும். தீவிரமான சில சந்தர்ப்பங்களில், இது மரணத்திற்கும் கூட வழிவகுக்கும்.

**சட்டத்தின் கீழ்**

அனைவருக்கும் பாதுகாப்பாக வாழ, மற்றும் மரியாதையுடன் நடாத்தப்பட உரிமை உண்டு. ஆஸ்திரேலியாவில் உள்ள சட்டம், ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்துகிறது. வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறைகள் (DFSV) ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை, மற்றும் இவை சட்டத்திற்கு எதிரான குற்றங்கள்.

தெற்கு ஆஸ்திரேலியாவின் சட்டத்தின் கீழ், DFSV குற்றவாளிகள் மீது, வன்தாக்குதல் மேற்கொண்டதாக, அல்லது அவர்கள் காயம் ஏற்படுத்தியிருந்தால், தீங்கு விளைவித்ததாக குற்றம் சாட்டப்படலாம்.

**யாராவது DFSV-ஐ அனுபவிக்கிறார்களா என்று என்னால் எப்படி சொல்ல முடியும்?**

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் ஆகியோருக்கு DFSV சேதம் விளைவிக்கிறது. வயது, வர்க்கம், பாலியல் நோக்குநிலை, திறன், இனம், பாலினம் அல்லது மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் இது யாருக்கும் ஏற்படலாம்.

ஒரு பெண் DFSV-ஐ அனுபவிக்கிறார் என்பதற்கான சில அறிகுறிகள் பின்வருமாறு:

- திடீரென்று எந்தக் காரணமும் இல்லாமல் வெளியே செல்வதை நிறுத்துதல்
- ஒரு குறிப்பிட்ட நபரைக் கோபப்படுத்துவது பற்றி மிகவும் கவலைப்படுதல்
- ஒருவரின் எதிர்மறையான நடத்தைக்கு நிறைய சாக்குப்போக்குகளைச் சொல்லல்
- விளங்கப்படுத்த முடியாத அடையாளங்கள் அல்லது காயங்கள் அவரது உடலில் இருத்தல்
- நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவதை நிறுத்துதல்
- ஒரு குறிப்பிட்ட நபர் அருகில் இருக்கும்போது, பயமாகவோ அல்லது எச்சரிக்கையாகவோ தென்படுத்தல்
- அவர்கள் ஏதேனும் ஒரு வழியில் அவதானிக்கப்படுகிறார்கள், பின்தொடரப்படுகிறார்கள், அல்லது கட்டுப்படுத்தப்படுகிறார்கள் என்ற கவலையுடன் தென்படுதல்.

**வன்முறையான அல்லது தவறான நடத்தைக்கான அறிகுறிகள் யாவை?**

வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் செய்யும் ஒருவர் பின்வருமாறு நடந்துகொள்ளக்கூடும்:

- அவரது மனைவியை / காதலியை / வாழ்க்கைத்துணையைப் பயமுறுத்தும் வகையில் செயற்படுதல்
- அவரின் மனைவியை / காதலியை / வாழ்க்கைத்துணையை எல்லா நேரத்திலும் இழிவுபடுத்துதல்
- அவரது மனைவி / காதலி / வாழ்க்கைத்துணையிடம் அவர்களைக் காயப்படுத்துவேன் என்று அச்சுறுத்துதல்
- பின்வருவன உட்பட, அவர்களின் மனைவி / காதலி / வாழ்க்கைத்துணையை கட்டுப்படுத்துதல்:
  - அவர்கள் எங்கே செல்லுகிறார்கள் என்பதை
  - அவர்கள் யாரைப் பார்க்கிறார்கள் மற்றும் யாரோடு பேசுகிறார்கள் என்பதை
  - அவர்கள் பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை
  - எப்படி மற்றும் எப்போது அவர்கள் தமது தொலைபேசி, மகிழுந்து, அல்லது கணினியை உபயோகிக்கிறார்கள் என்பதை
  - பல விதிமுறைகளை விதிப்பதன் மூலம், அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை
  - அவரது விதிமுறையை அவள் பின்பற்றாவிட்டால், கோபமடைதல்

**அடுத்த கட்ட அடியை எடுத்துவைத்தல்**

எந்த சமூகத்திலும் அல்லது கலாச்சாரத்திலும் DFSV ஏற்கத்தக்கது அல்ல. DFSV-ஐத் தடுப்பதிலும், அதை இனங்காணுவதிலும், அத்துடன் பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதிலும் உங்களால் முக்கிய பங்கு வகிக்க முடியும். யாராவது DFSV-ஐ அனுபவிக்கிறார்களா என்பதைக் கண்டறிய, அவர்களுக்கு செவிமடுக்கவும் அவர்களை ஆதரிக்கவும் நேரம் ஒதுக்குங்கள். 1800RESPECT-ல் (1800737732) அல்லது www.1800RESPECT.org.au-ல் மேலதிகத் தகவல் கிடைக்கும்.

**அவசரகாலத்தில் அல்லது யாராவது ஆபத்தில் இருந்தால் உடனடியாக 000-ஐ அழைக்கவும்.**

இது, DFSV-ஐக் குறித்துள்ள 4 உண்மைத் தாள்களில் ஒன்றாகும். DFSV-ஐ அனுபவிக்கும் ஒருவருக்கு உதவ உங்களால் என்ன செய்ய இயலும் என்பது பற்றிய கூடுதல் தகவல்கள் உண்மைத் தாள் 2-ல் கிடைக்கின்றன. பாலின சமத்துவத்தையும் மரியாதையையும் ஊக்குவிப்பது பற்றி அறிய, உண்மைத் தாள்கள் 3 மற்றும் 4-ஐப் பார்க்கவும்.